6-ஆம் வகுப்பு - சமூக அறிவியல்
புதிய கலைத் திட்டமும் பாடத் திட்டமும் -2003 -2 004 கல்வியாண்டு முதல் நடைமுறைக்குரியது

அ. சமூக அறிவியலில் வரலாறு, சமூகவியல், பொருளாதாரம், குடிமையியல் மற்றும் புவியியல் பகுதிகள் அடங்கியுள்ளன

வி. விரிவான நோக்கம் : மாணவர்கள் நற்குடிகளாகவும், சமூக விழிப்புணர்வு பெற்றவர்களாகவும், சமூக மேம்பாட்டில் ஈடுபாடு கொள்பவர்களாகவும் உருவாக்கப் பெறல்

இ. மதிப்பீடு : I. வரலாறு : 40 மதிப்பெண்கள், II. குடிமையியல் : 20 மதிப்பெண்கள், III. புவியியல் 40 மதிப்பெண்கள், - மொத்தம் 100 மதிப்பெண்கள்

I. தமிழ்நாடு வரலாறு - சங்க காலம், பல்லவர் காலம் (சமூகம், பொருளாதாரம், பண்பாடு) - 68 பாட வேளைகள் (திருப்புதல் தேர்வு பிறவும் சேர்த்து)					
அலகு/ பாட எண்.	எதிர்பார்க்கும் கற்றல் அடைவுகள்	பாடத்திட்டம்	1. கற்பித்தல் முறை 2. செய்முறை பயிற்சி 3. மதிப்பீடு	1. கற்பித்தல் உதவிப்பொருட்கள்/ ஊடகம் 2. விளக்க வகைகள்	பாட வேளை
I.1	1. மாணவர் வரலாற்றுக்கு முந்திய கால தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை பற்றிய அறிவினைப் பெறல் 2. மாணவர் கற்கால, உலோக கால மக்களின் வாழ்க்கையை வேறுபடுத்தும் திறன் பெறல்	வரலாற்றுக்கு முந்திய காலம் - பழைய கற்காலம் - புதிய கற்காலம் - உலோக காலம் - பெருங்கல் காலம் மக்களின் வாழ்க்கை நிலை	1. தமிழ்நாட்டில் பழைய கற்கால மக்கள் பயன்படுத்திய கருவிகளை வண்ணத்தாளில் வரைந்து காண்பித்து விளக்குதல் 2. தமிழ்நாடு வரைபடத்தில் மாணவர்களை பழைய கற்கால மனிதர்கள் வாழ்ந்த இடங்களைக் குறிக்கச் செய்தல் 3. மாணவர்கள் பழைய கற்காலம் புதிய கற்காலம் ஒற்றுமை வேற்றுமைகளை எழுதுதல்	1. தமிழ்நாடு வரைபடம் 2. பழைய, புதிய, உலோக, பெருங்கல் கால மனிதர்கள் பயன்படுத்திய கருவிகளின் படங்களை பயன்படுத்துதல்	5
I. 2	1. மாணவர் சங்க கால வரலாற்றினை அறிய உதவும் சான்றுகள் பற்றிய அறிவினைப் பெறல் 2. சங்ககால சான்றுகளை விளக்கும் திறன் பெறல் 3. சங்க கால தமிழ் அரசுகளைப் பற்றி விவரிக்கும் திறன் வளர்தல்	சங்க காலம் - சான்றுகள் - தமிழ் அரசுகள்	1. தமிழ்நாடு வரைபடத்தில் மூவேந்தர்களின் அரசு எல்லைகளைக் குறித்துக் காட்டி விளக்குதல் 2. மாணவர்கள் பல வண்ணங்களில் மூவேந்தர் அரசுகள், தலைநகரம், துறைமுகம் மற்றும் முக்கிய நகரங்கள் முதலியவற்றை வரைபடத்தில் குறித்தல் 3. வரைபடம் வரைதல்	1. சங்ககால அரசுகள் கொண்ட தமிழ் நாடு வரைபடத்தை பயன்படுத்துதல் 2. கொடிகள், சின்னங்கள், நாணயங்கள் போன்றவைகளின் படங்களைப் பயன்படுத்துதல்	10
I. 3	1. மாணவர் சங்ககால மக்களின் சமூக, பொருளாதார, சமய, பண்பாட்டு வாழ்க்கைப் பற்றிய அறிவினைப்பெறல் 2. சங்ககால மக்களின்	சங்க கால மக்களின் சமூக, பொருளாதார, சமய பண்பாட்டு வாழ்க்கை	1. தமிழ்நாடு வரைபடத்தில் சங்க கால வணிக மையங்களைக் குறிப்பிட்டு காண்பித்தல் 2. வரைபடத்தில் தலை நகரங்கள் துறைமுகங்களைக் காண்பித்தல்	1. தமிழ் நாடு வரைபடத்தினை பயன்படுத்துதல் 2. சங்ககால மக்களின் இசைக்	10

	வாழ்க்கையை பழைய கற்கால வாழ்க்கையுடன் ஒற்றுமை, வேற்றுமை படுத்துதல் 3. சங்ககால மக்கள் வாணிபத்தில் எவ்வாறு சிறந்து விளங்கினர் எனும் அறிவினைப் பெறல் 4. சங்ககால மக்களின் வாழ்க்கையை விவரிக்கும் திறன் பெறல்		1. மாணவர்களை சங்ககால உற்பத்திப் பொருட்களை வரிசைப்படுத்தச் செய்தல் 2. சங்ககால மக்களின் சமூக, பொருளாதார, சமய, பண்பாட்டு வாழ்க்கையை பற்றி ஒரு கட்டுரை எழுத வைத்தல் - 10 மதிப்பெண்கள் வழங்கல்	கருவிகள் மற்ற கருவிகளின் படங்களைப் பயன்படுத்துதல்	
II. 4	1. மாணவர் பண்டைய தமிழகத்துடன் கிரேக்க, ரோமனியர் கொண்டிருந்த தொடர்பினைப் பற்றிய அறிவினைப் பெறல் 2. தமிழ் நாட்டிலிருந்து கிரேக்க, ரோம நாட்டிற்கும் அங்கிருந்து தமிழ்நாட்டிற்கும் வந்த வணிகப் பொருட்களை அடையாளம் கூறல் 3. மாணவர் பண்டைய தமிழ்நாட்டுடன் கிரேக்க, ரோம் நாட்டிற்கு இருந்த தொடர்பினை விளக்கும் திறன் பெறல்	பண்டைய தமிழ் நாட்டுடன் கிரேக்க, ரோமானிய தொடர்புகள்	1. தமிழ்நாடு வரைபடத்தில் அரிக்கமேடு, புகார் ஆகிய இடங்களைக் குறிப்பிட்டு விளக்குதல் 2. அரிக்கமேடு, புகார் போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட புதை பொருள்களை மாணவர் பட்டியலிடல் 3. தமிழ்நாட்டுடன் கிரேக்க, ரோம தொடர்பு பற்றி மாணவர் ஒரு கட்டுரை எழுதுதல் - 10 மதிப்பெண்கள் வழங்கல்	1. அரிக்கமேடு, புகார் பகுதிகளைக் குறிக்க தமிழ்நாடு வரைபடத்தினைப் பயன்படுத்துதல் 2. மேற்குறிப்பிட்ட பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட புதை பொருள்களின் படத்தினைப் பயன்படுத்துதல்	5
II. 5	1. மாணவர் களப்பிரர்கள் யார் என்பதை புரிந்து கொள்ளுதல் 2. களப்பிரர் கால இலக்கியங்களை விளக்கும் திறன் பெறல் 3. மாணவர் களப்பிரர் காலம் ஏன் இருண்ட காலம் என அழைக்கப்படுகிறது என்பதை	சங்கம் மருவிய காலம் - களப்பிரர்கள் - இலக்கிய வளர்ச்சி	1. தமிழ்நாடு வரைபடத்தில் களப்பிரர் ஆண்ட பகுதிகளைப் குறிப்பிட்டு விளக்குதல் 2. வரைபடத்தில் மாணவர் களப்பிரர் ஆண்ட பகுதியைக் குறிக்கச் செய்தல் 3. களப்பிரர் கால இலக்கியங்களை மாணவரை எழுதச் செய்தல்	1. தமிழ்நாடு வரைபடத்தினை களப்பிரர் ஆண்ட பகுதியைக் காண்பிக்க பயன்படுத்துதல் 2. களப்பிரர் கால இலக்கிய நூல்களை குறிப்பிட பயன்படுத்துதல்	5

	விவரிக்கும் ஆற்றல் பெறல்				
III.6	1. மாணவர் பல்லவர் வரலாற்றுக்கான சான்றுகள் பற்றிய அறிவினைப் பெறல் 2. முற்கால, பிற்கால பல்லவர்கள் பற்றி புரிந்து கொள்ளுதல் 3. பல்லவர் சான்றுகளை கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயம், இலக்கியம் என வகைப்படுத்தும் திறன் வளர்தல்	பல்லவர்கள் - சான்றுகள் - முற்கால - பிற்கால பல்லவர்கள்	1. தமிழ்நாடு வரைபடத்தில் பல்லவர் கால தொல்பொருள்கள் கிடைத்துள்ள இடங்களை குறிப்பிட்டு விளக்குதல் ?? தமிழ்நாடு வரைபடத்தில் பல்லவர் தலைநகர், நகரங்கள், துறை முகங்களைக் குறிப்பிட்டு விளக்குதல் 2. பல்லவர் சான்றுகளை மாணவரை பட்டியலிடச் செய்யல் 3. பல்லவர் சான்றுகள் பற்றி வாய்மொழித் தேர்வு நடத்தி 10 மதிப்பிண்கள் வழங்கல்	1. தமிழ்நாடு வரை படத்தை பயன்படுத்தி பல்லவர் ஆண்ட பகுதிகளைக் குறிப்பிடுதல். 2. செப்பேடுகள், நாணயங்கள் மற்ற பல்லவர் நினைவுப் பொருட்களின் படங்களை பயன்படுத்துதல்	5
III. 7	1. மாணவர் பல்லவர் நிர்வாகம் பற்றிய அறிவினைப் பெறல் 2. பல்லவப் பேரரசின் மண்டலங்களை அடையாளம் செய்தல் 3. பல்லவர் நிர்வாகத்தின் முக்கிய அம்சங்களை விவரிக்கும் திறன் பெறல்	பல்லவர் நிர்வாகம் - அரசர்கள் - அமைச்சர்கள் - பேரரசின் மண்டலங்கள் - வரிகள் - நீதி - தண்டனைகள் - ஒழுங்குகள்	1. தமிழ்நாடு வரைபடத்தில் பல்லவர் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைக் காண்பித்தல் 2. வரைபடத்தில் பல்லவப் பேரரசின் மண்டலங்களைக் குறிப்பிட்டு விளக்குதல் 3. மாணவர் பல்லவ நிர்வாகம் பற்றி கட்டுரை எழுதுதல் - 10 மதிப்பெண்கள் வழங்கல்	1. பல்லவப் பேரரசின் எல்லைகளைக் காண்பிக்க தமிழ்நாடு வரைபடத்தினை பயன்படுத்துதல் 2. பல்லவ நிர்வாக அமைப்பினை படம் வரைந்து விளக்குதல்	10
III. 8	1. மாணவர் பல்லவர்களின் கீழ் மக்களின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கை பற்றிய அறிவினைப் பெறல் 2. மாணவர் பல்லவர்கால சமய நிலையைப் புரிந்து கொள்ளுதல் 3. மாணவர் ஆள்வார்கள், நாயன்மார்களை பட்டியலிடும் திறன் பெறல்	பல்லவர்களின் கீழ் மக்களின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கை	1. மக்களின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கையை சான்றுகளுடன் விளக்குதல். 2. மாணவரை ஆள்வார்கள், நாயன்மார்களை பட்டியலிடச் செய்தல் 3. மாணவரை பல்லவர்கள் கால மக்களின் சமூக, பொருளாதார, சமய வாழ்க்கைப் பற்றி ஒரு கட்டுரை எழுதச் செய்து 10 மதிப்பெண்கள் வழங்கல்	1. ஆள்வார்கள், நாயன்மார்கள் படங்களையும் பெயர்களையும் சமய நிலையை விளக்க பயன்படுத்துதல் 2. மகாபலிபுரத்தில் காணப்படும் கலங்கரைவிளக்கு நினைவுத் தூண் படத்தை பயன்படுத்தி கப்பல் போக்குவரத்தி	5

				னை விளக்குதல்	
III.9	1. மாணவர்கள் பல்லவர்களின் கீழ் பண்பாடு வளர்ச்சி பற்றிய அறிவினைப்பெறல் 2. பல்லவர்கள் இலக்கியங்களைப் புரிந்து கொள்ளுதல் 3. பல்லவர் கலை, கட்டடக் கலையை விவரிக்கும் திறன் பெறல்	பல்லவர் கால பண்பாடு வளர்ச்சி - இலக்கியம் கலை, கட்டடக் கலை	1. ? பல்லவர் கால இலக்கிய மேன்மையை விளக்குதல் ? தமிழ்நாடு வரைபடத்தில் பல்லவர் நினைவு கட்டடங்கள் உள்ள பகுதிகளைக் காண்பித்தல் 2. காஞ்சிபுரம், மகாபலிபுரத்திற்கு சுற்றுலா ஏற்பாடு செய்தல் 3. மாணவரை பல்லவர் கால பண்பாடு வளர்ச்சி பற்றி ஒரு கட்டுரை எழுதச் செய்து 10 மதிப்பெண் வழங்கள்	1. தமிழ்நாடு வரைபடத்தில் பல்லவர் கட்டடங்கள் உள்ள பகுதிகளைக் குறிப்பிடுதல் 2. மாணவருக்கு ஆள்வார்கள் நாயன்மார்களின் சமய இலக்கியங்களை காண்பித்தல்	5
IV. 10	1. மாணவர் முதல் பாண்டியப் பேரரசு பற்றி புரிந்து கொள்ளுதல் 2. அக்கால மக்களின் சமூக, பண்பாட்டு வாழ்க்கை பற்றிய அறிவினைப் பெறல் 3. அக்கால மக்களின் சமூக, பண்பாட்டு நிலைமைகளை விவரிக்கும் திறன் பெறல்	முதல் பாண்டியப் பேரரசின் கீழ் தமிழ் நாட்டு மக்களின் சமூக, பண்பாட்டு வாழ்க்கை	1. ? தமிழ்நாடு வரைபடத்தில் முதல் பாண்டியப் பேரரசின் எல்லைகளைக் குறிப்பிட்டு விளக்குதல் ? மக்களின் சமூக, பண்பாட்டு நிலையினை விளக்குதல் 2. தமிழ்நாடு வரைபடத்தில் மாணவரை பாண்டியர் தலைநகர், பரப்பினை குறிக்கச் செய்தல் 3. மாணவரை இத்தலைப்பில் ஒரு கட்டுரை வரையச் செய்து 10 மதிப்பெண்கள் வழங்குதல்	1. தமிழ்நாடு வரைபடத்தை பயன்படுத்தி முதல் பாண்டியப் பேரரசின் பரப்பினைக் குறித்தல் 2. நினைவுக் கட்டடங்கள் (அ) கோயில்களின் படங்களைப் பயன்படுத்துதல்	8
II. குடிமையியல் - 34 பாட வேளைகள் (திருப்புதல், தேர்வு பிறவும் சேர்ந்து)					
I. 1	1. மாணவர் தற்கால மக்களின் சமுதாய வாழ்க்கை பற்றிய அறிவினைப் பெறல் 2. நகர வாழ்க்கையைப் புரிந்து கொள்ளுதல் 3. கிராம வாழ்க்கையைப் புரிந்து கொள்ளுதல் 4. இரண்டினையும் வேறுபடுத்தும் திறன் பெறல்	சமுதாய வாழ்க்கை - நகர, கிராம வாழ்க்கை முறை	1. ? மக்களின் சமுதாய வாழ்க்கையை விளக்குதல் ? நகர, கிராம வாழ்க்கையை விளக்குதல் 2. ? மாணவரை நகர, கிராம வாழ்க்கையை உற்றுநோக்கச் செய்து பதிவு செய்யச் செய்தல் ? மாணவரை நகர, கிராம வாழ்க்கையை ஒற்றுமை, வேற்றுமை படுத்தச் செய்தல் 3. வாய்மொழித்தேர்வு - 10 மதிப்பெண்கள் வழங்கல்	1. நகர வாழ்க்கையை வர்ணிக்கும் படத்தினைப் பயன்படுத்துதல் 2. கிராம வாழ்க்கையை வர்ணிக்கும் படத்தினைப் பயன்படுத்துதல் 3. மாநகர, நகர, கிராம படங்களைப் பயன்படுத்துதல்	5

I. 2	1. மாணவர் சமுதாயத்தில் பல்வேறு சமூக குழுக்கள் உள்ளது பற்றிய அறிவினைப் பெறல் 2. சமூக குழுக்களின் பணிகளைப் புரிந்து கொள்ளுதல் 3. சமுதாயத்தில் பல்வேறு சமூக குழுக்களின் பங்கினை விவரிக்கும் திறன் பெறல்	சமூக குழுக்கள் - ஆசிரியர்கள், அலுவலர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் பொறியாளர்கள் பிறர்.	1. ஆசிரியர்கள், அலுவலர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பொறியாளர்களின் பங்கினை விளக்குதல் 2. மாணவர் தம் பகுதியில் வாழும் சமூக குழுக்களை வரிசைப்படுத்தச் செய்தல் 3. மாணவரை இக்குழுக்களின் பணிகளை வரிசைப்படுத்தச் செய்ய வைத்து - செய்முறையின் அடிப்படையில் 10 மதிப்பெண் வழங்குதல்	1. சமூக குழுக்களின் படங்களை பயன்படுத்துதல் 2. மாணவர்களை ஆசிரியர், அலுவலர், மருத்துவர், வழக்கறிஞர், வியாபாரி போல் நடிக்கச் செய்தல்	5
I. 3	1. மாணவர் பொதுச் சொத்து பற்றி அறிவினைப் பெறல் 2. பொதுச் சொத்து பாதுகாக்கப்பட வேண்டியதின் அவசியத்தைப் புரிந்து கொள்ளுதல் 3. பொதுச் சொத்தை பாதுகாக்கும் வழிமுறைகளைக் கூறும் திறன் பெறல்	பொதுச் சொத்துக்களை பராமரித்தல்	1. பொதுச் சொத்துகளை வகைப்படுத்தி, அவற்றினை பராமரித்தலின் அவசியத்தை விளக்குதல் 2. மாணவரை தம் பகுதியிலுள்ள பொதுச் சொத்துக்கள் பற்றி எழுத வைத்தல் 3. மாணவரை பொதுச் சொத்துக்களை பராமரிக்கும் வழிமுறைகளை எழுத வைத்து 10 மதிப்பெண்கள் வழங்கல்	1. மருத்துவமனை, அலுவலகங்கள், பள்ளிக் கட்டடங்கள், பேருந்து, ரயில்வண்டி போன்ற பொதுச் சொத்துக்களின் படங்களை பயன்படுத்துதல் 2. வண்ணச் சித்தரிப்புகளை புரியவைத்தல்	5
II. 4	1. மாணவர் பஞ்சாயத்து முறை பற்றிய அறிவினைப் பெறல் 2. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களின் பணிகளைப் புரிந்து கொள்ளுதல் 3. பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்களின் பங்கினை விவரிக்கும் திறன் பெறல்	பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள்	1. பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து யூனியன்களின் பணிகளை விளக்குதல் 2. இவ்வங்கங்களின் பணிகளை மாணவரை வரிசைபடுத்தச் செய்தல் - மாதிரி பஞ்சாயத்து செயல் பாட்டினை நடத்துதல் 3. கட்டுரைத் தேர்வு - 10 மதிப்பெண்கள்	1. பஞ்சாயத்துக்களின் பணிகளை படம் வரைந்து பயன்படுத்துதல்	5
II. 5	1. மாணவர் நகராட்சிகள் மாநகராட்சிகள் இருப்பன பற்றிய அறிவினைப் பெறல்	நகராட்சி, மாநகராட்சி, டவுன்ஷிப் கண்டோன்மெண்டுகள்	1. இவ்வமைப்புகளின் தேர்வுகள், பணிகளை விளக்குதல் 2. இவ்வமைப்புகளின் பணிகளை மாணவரை வரிசைப்படுத்தச் செய்தல்	1. நகராட்சி, மாநகராட்சி, டவுன்ஷிப் கண்டோன்மெண்ட் கழகங்களின்	5

	2. இவ்வமைப்புகளின் தலைவர்களைப் புரிந்து கொள்ளுதல் 3. இவ்வமைப்புகளின் பணிகளைப் புரிந்து கொள்ளுதல் 4. இவ்வமைப்புக்களின் பணிகள் தேர்தல் முறையை விளக்கும் திறன் பெறல்		3. வாய்மொழித் தேர்வு : 10 மதிப்பெண்கள்	படங்களைப் பயன்படுத்துதல் 2. இவ்வமைப்புகளின் பணிகள் பணியாளர்களின் படங்களை பயன்படுத்துல்	
II. 6	1. மாணவர் மாவட்ட நிர்வாகம் பற்றிய அறிவினைப் பெறல் 2. மாவட்ட அளவிலுள்ள அலுவலர்களின் பங்கினைப் புரிந்து கொள்ளுதல் 3. மாவட்ட நிர்வாகத்தினை விளக்கும் திறன் பெறல்	மாவட்ட நிர்வாகம் - ஆட்சியாளர் - வாருவாய் அலுவலர்கள் - காவல் கண்காணிப்பாளர் - சட்டம், ஒழுங்கு - நீதிமன்ற அலுவலர்கள் - நீதி மன்றங்கள்	1. மாவட்ட நிர்வாகத்தினை விளக்கப்படம் மூலம் விளக்குதல் 2. மாணவரை மாவட்ட அளவு அலுவலர்கள், அவர்களது பணிகள் பற்றிய தகவல்களை சேகரிக்கச் செய்தல் 3. வாய்மொழித் தேர்வு : 10 மதிப்பெண்கள்	1. மாவட்ட வரைபடத்தினைப் பயன்படுத்துதல் 2. மாவட்ட அலுவலர்களை உள்ளடக்கிய விளக்கப்படத்தினை பயன்படுத்துதல்	9